DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, THOOTHUKUDI.

| | | |
|---|---|---|
| Calendar<br>Miscellaneous<br>(Chapte.. | ... | DEPOSITION OF WITNESS |
| Preliminary Register | ... | Case No. S.C. No. 41 /2019 |
| Sessions | ... | |
| Deposition of witness for | | Prosecution - P.W. 18<br>Defence<br>Court |

| | |
|---|---|
| Name | பாலமுருகன் |
| Father's Name | த/பெ நல்லவீரப்பன் |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | 57 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 28.04.2023.

**(1 வது, 2 வது எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரியின் வருகையின்மைக்கு கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. )**

**முதல் விசாரணை :—**

நான் தற்போது வட்டார தடய அறிவியல் ஆய்வகம் இராமநாதபுரத்தில் துணை இயக்குநராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 13.02.2014 அன்று நான் திருநெல்வேலி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் அறிவியல் அலுவலராக பணியில் இருந்தபோது நீதித்துறை நடுவர் 1, தூத்துக்குடி அவர்களின் வேண்டுதல் கடித எண் 579/2014 நாள் 13.02.2014 என்று

குறிபிடப்பட்ட கடிதத்துடன் தட்டப்பாறை காவல் நிலைய குற்ற எண் 8/2014 வழக்கின் சம்பந்தப்பட்ட அட்டைப் பெட்டி ஒன்றை நீதிமன்ற முத்திரையுடன் காவலர் பெரியநாயகம் என்பவர் மூலமாக எங்கள் ஆய்வகத்தில் பெறப்பட்டது. அந்த அட்டைப் பெட்டியின் மேலிருந்த நீதிமன்ற முத்திரை முழுமையாகவும், சரியாகவும் இருந்தது. அந்த அட்டைப் பெட்டியின் உள்ளே கீழ் கண்ட வழக்குச் சொத்துக்கள் காணப்பட்டன. வரிசை எண் 1. மண்சிறிதளவு, வரிசை எண் 2. மாதிரி மண். இந்த மாதிரிகளை ஆய்வு செய்ததில் இரத்தக்கறையானது வரிசை எண் 1ல் காணப்பட்டது. வரிசை எண்–2ல் இரத்தக்கறை காணப்படவில்லை. இது குறித்து கருத்துரை வழங்கினேன். T.No.99/2014/TIN/BIOL./99/2014, நாள் 11.03.2014 தேதியிட்ட அந்த கருத்துரை அறிக்கை அ.சா.ஆ–16 ஆகும். மேற்கூறிய இரத்தக்கறை மாதிரியை அதன் இனம் மற்றும் இரத்தவகை அறியும்பொருட்டு துணை இயக்குநர், குருதி வடிநீரியியல் பிரிவு, மதுரைக்கு அனுப்பி வைத்து அறிக்கை பெறப்பட்டது. அந்த அறிக்கையில் மேற்கூறிய மாதிரி இரத்தம் மனிதஇனம் எனவும், அவை எந்தவகை இரத்தப்பிரிவை சார்ந்தவை என தீர்மானிக்க முடியவில்லை என்று கண்டறியப்பட்டு எங்கள் ஆய்வகத்தில் அறிக்கை பெறப்பட்டது. இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :–**</u>

எதிரிகள் தரப்பிற்கு குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

Sd/– R. Selvakumar
Chief Judicial Magistrate,
Thoothukudi.